**செய்தி வெளியீடு எண்: 11/2023** **நாள்: 23.01.2023**

**பத்திரிக்கை செய்தி**

**<u>தைத்திருநாளை தொடர்ந்து,</u>**
**<u>புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி.ராமச்சந்திரன் சென்ட்ரல்</u>**
**<u>மெட்ரோ இரயில் நிலையத்தில் மெட்ரோ இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது</u>**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மார்க் மெட்ரோவுடன் இணைந்து தை திருநாளை தொடர்ந்து 21.01.2023 (சனிக்கிழமை) மற்றும் 22.01.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய இரு தினங்களிலும் புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி.ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் "மெட்ரோ இன்னிசை நிகழ்ச்சி - 2023" நடைபெற்றது.

21.01.2023 (சனிக்கிழமை) அன்று புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி.ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் பிரபல பாடகர்கள் சாம் விஷால் மற்றும் ரக்ஷிதாவின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

அதேபோல் 22.01.2023 (ஞாயிற்றுக்கிழமை) அன்று புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி.ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் தாய்க்குடம் பிரிட்ஜ் கலை குழுவின் பல்சுவை இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் அவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் இணைந்து இந்நிகழ்ச்சியினை கண்டு களித்தனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**